**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101957

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 01/2023/AC/CB Date: நாள் 25.03.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23.03.2023 Date to : நாள் வரை 24.03.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை 17.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.03.2023 Time : நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-I Time : நேரம் 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 45 kms at East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Sulthanpettai Police Station, Coimbatore District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Panjalingam (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் S/O. Subramaniam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 36/23 (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி D. No. 1/87, Santhamanaickan palayam, Dhasanaickenpalayam post, Malaipalayam, Sulur, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. R. Ravichandiran, Special Sub-Inspector of Police, Sulthanpettai Police Station, Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

* GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:-
Separate Sheets enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.03.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் @ 12.30hrs

Name: பெயர் R. EZHILARASI
Rank: நிலை Inspector of Police,
Vigilance and Anti-Corruption
Coimbatore.
25.03.2023

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2023/ AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

இன்று 25.03.2023-ம் தேதி சனிக்கிழமை 10.00 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர் மாவட்டம், மலைப்பாளையம் சூலூர், தாசநாயக்கன்பாளையம் (அஞ்சல்), சந்தம நாயக்கன்பாளையம் கதவு எண்.1/87,என்ற முகவரியில் குடியிருந்து வரும் சுப்பிரமணியம் என்பவரது மகன் S.பஞ்சலிங்கம் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சுசெய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான்பேட்டை காவல் நிலையத்தில் பணிபுரிந்து வரும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.R.ரவிசந்திரன் என்பவர், புகார்தாரரை விசாரணைக்காக ஸ்டேசனுக்கு அழைத்துசென்று அவர் மீது FIR போட்டுவிடுவதாக மிரட்டி, காவல் நிலையத்தில் வைத்து புகார்தாரர் உட்பட இரண்டு பார்டிகளையும் சமாதானம் செய்துவைத்து, புகார்தாரர் மீது வழக்கு ஏதும் பதியாமல் CSR பதிவுசெய்து மனுவிசாரணையாக பாவித்து, அதற்காக 4,000/- ரூபாய் லஞ்சமாக பணம் கேட்டிருப்பது தெரியவந்தது. புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 25.03.2023-ம் தேதி 11.00 மணி முதல் 12.00 மணி வரை கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற

எண்.01/2023/AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திரு.R.ரவிசந்திரன் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: S.பஞ்சலிங்கம், வயது 36, த/பெ. சுப்பிரமணியம், க.எண்.1/87, சந்தம நாயக்கன்பாளையம், தாசநாயக்கன்பாளையம் (அஞ்சல்), மலைப்பாளையம் சூலூர், கோயம்புத்தூர். பெறுநர்: காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அம்மா/ஐயா, நான் கோயம்புத்தூர் மாவட்டம் சூலூரில் உள்ள சந்தம நாயக்கன்பாளையத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துவருகிறேன். அதுபோக கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்து வியாபாரமும் செய்து வருகிறேன். கடந்த 22.03.2023-ம் தேதி மாலை சுமார் 3.30 மணிக்கு மேல் கார்த்திகேயன் என்பவரது மளிகை கடைக்கு அருகில் ரோட்டில் நிறுத்தியிருந்த டிப்பர் லாரி சம்மந்தமாக எனக்கும், எனது ஊரை சேர்ந்த திரு.ஜெயபிரகாஷ் என்பவருக்கும் வாய் தகராறு ஏற்ப்பட்டது. அந்தசமயத்தில் ஜெயபிரகாசின் அம்மா தனலட்சுமி என்பவர் அங்கு வந்து என்னை தகாத வார்த்தையில் திட்டினார். அதற்கு நான் ஏங்க்கா இப்படி எல்லாம் பேசறிங்கன்னு கேட்டுவிட்டு நான் வீட்டுக்குப்போய் எனது அப்பாவிடம் தனலட்சுமி அக்கா என்னை தகாத வார்த்தையால் திட்டியது குறித்து சொன்னேன். அதற்கு என் அப்பா இரு நா இப்பவே போய் என்னன்னு கேட்கிறேனு சொல்லி கிளம்பியவரை நான் அங்க போக வேண்டாம்பா, இத இப்படியே விட்டுவிடலாம்முனு சொன்னேன். அதுக்கப்புறம் அன்று மாலை சுமார் 6.30 மணிக்கு எனது ஊர்காரர் ஒருவர் என்னை போனில் கூப்பிட்டு எனது அப்பா தனலட்சுமி அக்கா வீட்டில வாக்குவாதம் செஞ்சிட்டு இருப்பதாக சொன்னாங்க. நான் உடனே அங்கு போய் எனது அப்பாவே சத்தம் போட்டுவிட்டு எனது வீட்டிற்கு கூட்டிட்டு வந்திட்டேன். மேலும் மேற்படி வாக்குவாதத்தின் போது அங்கிருந்த ஒருவர் போனில் வீடியோ எடுத்துக்கொண்டு இருந்தபோது எனது அப்பா எதுக்கு வீடியோ எடுக்கிறீங்கன்னு சொல்லி செல்போனை தட்டிவிட்டார். அதன்பிறகு அடுத்த நாள் 23.03.2023-ம் தேதி காலை நான் தோட்டத்தில் இருந்தபோது சுல்தான்பேட்டை காவல் நிலையத்தின் SSI திரு.ரவிசந்திரன் அவர்கள் எனது செல்போன் எண் 9789129083-க்கு அவரது செல்போன் 9842650465-லிருந்து என்னை கூப்பிட்டு எங்க இருக்கிங்கன்னு கேட்டார். நான் வீட்டில் இருப்பதாக சொன்னேன். அதற்கு அவர் என் மீது புகார்

வந்திருப்பதாகவும், அது சம்மந்தமாக விசாரிக்க வேண்டும் என்று சொல்லி என்னை வீட்டிலேயே இருக்க சொல்லிவிட்டு சிறிது நேரத்தில் வந்துவிட்டார். முந்தைய நாள் நடந்த பிரச்சனை தொடர்பாக வந்த புகார் குறித்த விபரத்தை என்னிடம் தெரிவித்து அது சம்மந்தமாக என்னை விசாரிக்க வேண்டும் என்று சொல்லி என்னை சுல்தான்பேட்டை போலிஸ் ஸ்டேசன் வரச்சொல்லிவிட்டு சென்றுவிட்டார். நானும் எனது நண்பர் மகேந்திரனுடன் போலிஸ் ஸ்டேசன் சென்று SSI திரு.ரவிசந்திரன் அவரை சந்தித்தேன். சிறிது நேரத்தில் ஜெயபிரகாசும் அவரது அம்மா தனலட்சுமியும் வந்தார்கள். அவர்களிடம் பேசியபிறகு SSI திரு.ரவிசந்திரன் அவர்கள் என்னிடம் ஜெயபிரகாசின் மனைவியை தகராறில் அடித்துவிட்டதாகவும், அதை வீடியோ எடுத்து வைத்திருப்பதாகவும், அவர் மருத்துவமனையில் அட்மிட்டாகியுள்ளதாகவும், என் மீது FIR போடப்போவதாக சொல்லி எனது போனை வாங்கி வைத்துக்கொண்டு என்னுடன் வந்த மகேந்திரனை வெளியே இருக்கசொல்லி என்னை ஸ்டேசனில் உட்கார வைத்துவிட்டார். சிறிது நேரம் கழித்து SSI திரு.ரவிசந்திரன் அவர்கள் என்னிடம் உன் மீது FIR ரெடி செய்து விட்டதாகவும், என்ன செய்யலாம் என்று என்னிடம் கேட்டார். நான் ஒரு தப்பும் செய்யலீங்க சார் என்று சொன்னேன். SSI சார் எனக்கு என்ன செய்வேன்னு கேட்டார். நான் ஒன்றும் சொல்லாமல் இருந்தேன். அதற்கு SSI சார் என் மீது FIR போடாமல் அவர்களிடம் சமாதானமாக பேசி வெறும் CSR மட்டும் போட்டு என்னை விடுவிப்பதாகவும், அதற்காக தன்னை கவனிக்குமாறு சொன்னார். நான் ஒன்னுமே செய்யலீங்க சார் நீங்க சரியா விசாரிக்காமல் என்னை மிரட்றீங்கன்னு கேட்டேன். அதற்குள் எனது அண்ணனும் மாமவும் போலிஸ் ஸ்டேசனுக்கு வந்தாங்க. அவர்களிடம் மேற்படி SSI அவர்கள் ஒரு 5 நிமிசம் டைம் தரேன் அதற்குள் அவர்களிடம் சமாதானம் பேசி முடிவு பண்ணுங்க இல்லேன்னா FIR போட்டிடுவேன்னு சொன்னார். எனது அண்ணன், மாமா மற்றும் எங்க ஊர்காரங்க மூலமா ஜெயபிரகாசிடம் சமாதானம் பேசினார்கள். அதன்பின்னர் எனது அப்பா சுப்பிரமணியம், கருப்புசாமி, கார்த்திகேயன் மற்றும் என் மீதும் CSR போட்டு, எங்கள் அனைவரிடமும் காவல் நிலையத்தில் வைத்து எழுதிவாங்கிகொண்டார்கள். அதன்பிறகு SSI சார் என்னை வெளியே அழைத்து, தான் ருச்சி ஹோட்டலில் இருப்பதாகவும், போகும் போது அவரை வந்து பார்த்துவிட்டு போகுமாறு சொன்னார். நானும் ஹோட்டலுக்கு சென்றேன். அப்போது SSI சார் என்னிடம் இங்கபாரு ரொம்ப ரிஸ்கெடுத்து FIR போடாம CSR போட்டு உன்னை

காப்பாத்தியிருக்கேன் என்ன கவனிச்சிட்டு போ என்று சொன்னார். எனக்கு மனசு சரியில்லைங்க சார் ஈவினிங்கு வரேன்னு சொல்லிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். அன்றையதினம் மாலை சுமார் 4.30 மணியளவில் SSI சார் அவர்கள் என்னை செல்போனில் அழைத்து என்னப்பா வரேனு சொன்ன வரவே இல்லே பணம் 5 ஆயிரத்தை எடுத்துட்டு என்னை வந்து பாருனு சொன்னார். சார் நான் காலையில் வரேன்னு சொன்னேன். அதற்கு அவர் காலையில போன் பண்ணுப்பான்னு சொல்லி போனை வைத்துவிட்டார். அடுத்த நாள் 24.03.2023-ம் தேதி காலையில் நான் அவரை செல்போனில் அழைத்து எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு சார் ஈவினிங் வரேன் என்று சொன்னேன். அவரும் சரி வாப்பான்னு சொன்னார். நான் நேற்று 24.03.2023-ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் நான் SSI சாரை சந்திக்க சுல்தான்பேட்டை ஸ்டேசனுக்கு போயிக்கொண்டிருந்தேன் அப்போது SSI சார் ஸ்டேசனில் இருந்து வெளியே வந்துகொண்டிருந்தவர், ஸ்டேசனுக்கு சற்று தொலைவில் என்னை பார்த்ததும் என் அருகில் அவரது வண்டியை நிறுத்தி என்னப்பா இவ்வளவு நேரம் கழிச்சு வர, நீ வருவேன்னு நான் எதிர்பார்த்திட்டு இருந்தேன். பணம் கொண்டு வந்திருக்கையானு கேட்டார். அதற்கு நான் கொண்டு வரல சார் என்றும், தொகை கொஞ்சம் அதிகமாக இருக்கு சார், நான் ஒரு தப்பும் செய்யவில்லையே சார் என்று சொன்னேன். அதற்கு அவர் சரிப்பா 4,000/- ரூபாய் கொடு என்று கேட்டார். நான் பணம் கொண்டு வரல சார் என்று சொன்னேன். அதற்கு அவர் நானும் டூட்டியா போறேன் நாளைக்கு பணத்தை ரெடி பண்ணிட்டு மதியம் எனக்கு போன் பண்ணிட்டு பணத்தை கொண்டு வந்து தா என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லி வந்துவிட்டேன். மேற்படி சம்பவங்களை யோசித்து பார்த்த போது எந்த தப்பும் செய்யாத என்னை விசாரணைக்காக ஸ்டேசனுக்கு அழைத்துவந்து FIR போட்டுவிடுவதாக மிரட்டி எங்களை சமாதானம் செய்துவைத்து CSR போட்டதற்காக 4,000/- ரூபாய் லஞ்சமாக SSI திரு.ரவிசந்திரன் அவர்களுக்கு கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே மேற்படி SSI திரு.ரவிசந்திரன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd.XXXXX 25/03/2023 (S.Panjalingam). Respected Madam, Received the complaint on 25.03.2023 at about 10.00 hrs. sd.XXXXX, 25/03/2023, Inspr., V&AC, CBE. Respected Madam, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.01/2023/AC/CB, u/s. 7 of

the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 25.03.2023 between 11.00 hrs and 12.00 hrs. sd.XXXXX, 25/03/2023, Inspr., V&AC, CBE. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

R. எழில 25/03/2023

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.